SOND

SOND Better World Movement

*இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.*

*T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk*

# மாதாந்த அறிக்கை

**ஐப்பசி, 2012.**

**Social Organizations Networking for Development**

**RKM Road**
**Akkaraipattu**

**No. 19, Saravana Road**
**Kallady Batticaloa.**

**60" Arasady Road**
**Jaffna.**

## இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

# மிதிவெடி அபாயக்கல்வி

மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாடானது பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்டது இவற்றின் விபரம் கீழ்வருமாறு.

| பாடசாலையின் பெயர் | திகதி |
|---|---|
| Mandatheevu M.V | 01.10.2012 |
| Mankumpan A.M.T Shool | 03.10.2012 |
| Allapiddy Sarswathy Viddyalaim | 04.10.2012 |
| J/Saraswathi Viddyalaim | 10.10.2012 |
| J/Saivapirakasa Viddyalaim | 10.10.2012 |
| J/Tellipalai Nadeawara M.V | 10.10.2012 |
| J/Nadeswara Kanista Viddiyalaim | 11.10.2012 |
| J/Nakarkovil M.V | 16.10.2012 |
| J/Viyavil Saiva magaviddyalaim | 17.10.2012 |
| Idaikkadu M.V | 31.10.2012 |



## மிதி வெடி அபாயக்கல்வி விழிப்புணர்வு

தெல்லிப்பளை பிரதேசத்தில் கொல்லன்கலட்டி கிராமத்தில் ஆரம்ப பாடசாலையில் மக்களை ஒன்று கூட்டி மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வினை 19.10.2012லும் பின்பு 22.10.2012ல் வளாய் இடைக்காட்டுப் பகுதியிலும் நடைபெற்றது.

மிதிவெடி அபாயக்கல்வி விழிப்புணர்வினை வழங்கிய போது மக்களால் இனம் காணப்பட்ட வெடிக்காத வெடிபொருட்கள் இவை தெல்லிப்பளைப் பிரதேசத்திலும் பருத்தித்துறை பிரதேசத்திலும் மருதன்கேணி நாகர்கோவில் பகுதியிலும் இனம் காணப்பட்டவை ஆகும்.







# Non State Actors in Development Project அரசசாரா செயற்பாட்டாளர்களின் அபிவிருத்தி செயற்திட்டம்

1. பெண்கள் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜர் பெருமாள் ஆலய முன்றலில் 12.10.2012 தொடக்கம் 13.10.2012 வரை நடைபெற்றது.
2. சிற்றூண்டி தயாரித்தலுக்கு 02 பேருக்கும் மாட்டு திவனம் 04 பேருக்கும் தையல் வேலைக்காக 01 பயனாளிக்கும் 15.10.2012 திகதி வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது.
3. 19.10.2012 வெள்ளிக்கிழமை பாதீனம் செடியை இல்லாதொழிப்பதற்கான கருத்துக்களம் (Talk Shop) கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. கருத்துகளத்தின் தலைப்பு “ ஏன்? எப்படி? எதனால்? பாதீனியத்தை இல்லாதொழிக்க முடியவில்லை? இதற்கு பொறுப்பேற்க வேண்டியது பொது மக்களா? பொறுப்பிலுள்ளோரா? இக்கருத்து களத்தில் நூற்றுக் கணக்கானோர் பற்றினர்கள். இக்கருத்து களம் கோப்பாய் பிரதேச செயலர் சார்பில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு.சு.கிருஸ்ணராஜன் தலைமையில் நடைபெற்றது. இலகுபடுத்துனராக SOND நிறுவன தலைவர் திரு.ச. செந்துராசா அவர்கள் பங்குபற்றினர். மேலும் யாழ் மாவட்ட விவசாய திணைக்கள பிரதி விவசாய பணிப்பாளர் திரு. சி.சிறிபாலசுந்தரம் அவர்கள் விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் திரு.வி. இளங்குமரன் அவர்கள்யாழ் பல்கலைக்கழக பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.S.உதயகுமார் அவர்கள் சூழலியலாளர் திரு.போ.ஜங்கரநேசன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றி தங்கள் கருத்துக்களையும் வழங்கினார்கள். கோப்பாய் பகுதி சிவில் சமூக அமைப்புக்கள் ,மக்கள் மன்ற உறுப்பினர்கள்,விவசாய சம்மேளன பிரதிநிதிகள் ,விவசாயிகள்,நலன் விரும்பிகள்,கிராம சேவை அதிகாரிகள் பட்டதாரி பயிலுனர்கள் ,வெளிகள உத்தியோகத்தர்கள், SOND நிறுவன EU NSA உத்தியோகத்தர்கள் நிகழ்வில் பங்குபற்றினார்கள்.
4. 26.10.2012 வெள்ளிக்கிழமை காலை. J/261 கோப்பாய் மத்தி கிராமசேவையாளர் பிரிவில் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அண்மையில் பாதீனியம் செடியை இல்லாதொழிப்பது தொடர்பான ஆரம்ப சிரமதான நிகழ்ச்சி நடைபெற்றது. இச்சிரமதான நிகழ்ச்சியில் கிராமசேவையாளர், விவசாய போதானாசிரியர், பிரதேச சபை உறுப்பினர்கள் ,பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் , மக்கள் மன்ற உறுப்பினர்கள், SOND நிறுவன EU NSA உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் பங்குபற்றினார்கள் .





SOND

## Inclusive Economic Development (IED) - ஒருங்கிணைந்த பொருளாதார அபிவிருத்தித்திட்டம்

**IED** திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேசத்தில் சிறுப்பிட்டியில் அமைந்துள்ள யாழ் சக்தி உள்ளூர் உற்பத்தி நிலையத்தில் அதன் உற்பத்தியாளர்களுக்கான பயிற்சி நிகழ்வு 04.10.2012 தொடக்கம் 06.10.2012 வரை தினமும் 9 மணிதொடக்கம் 5 மணிவரை நிலையத்தில் பயிற்றுவிப்பாளர் திருமதி. ஜெயநாயகி மேற்ப்பார்வையில் நடைபெற்றது. இதன் போது தட்டை வடை, மரவள்ளி சிப்ஸ், வடகம் மற்றும் சிற்றுண்டி போன்றவை செயல்முறை மூலம் வியாபார நோக்கில் செய்வது தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

**IED** திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச வாழை செய்கையாளர் பெருமளவில் இயற்கை முறையிலேயே இரசாயன பாவனை இன்றி வாழைச் செய்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.இதனை உறுதிப்படுத்தி இயற்கை முறை உற்பத்தி சான்றிதல் (**Organic Certificate** ) பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்பகட்டமாக விவசாய குழுக்களின் தலைவர் மற்றும் ஆர்வலகளுக்கான கலந்துரையாடல் 25.10.2012 அன்று உரும்பிராய் கமநல சேவை நிலையத்தில் **IED** திட்ட ஆலோசகர் திரு. கமலநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் 25 பேர் வரை பங்குபற்றி ஆர்வத்துடன் கருத்துக்களை பரிமாறி கொண்டனர். தொடர்ந்து புத்தூர் கமநல சேவை நிலையத்தில் 2.30 மணிக்கு **IED** திட்ட ஆலோசகர் திரு. கமலநாதன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதில் 15 பேர் பங்குபற்றி கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். இது **Organic Certificate** தொடர்பான ஆரம்ப நிகழ்வாக அமைந்தது.

**IED** திட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவித்து இரசாயனங்கள் அற்ற மரக்கறி வகை மற்றும் மூலிகை உற்பத்திகள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுடனான கலந்துரையாடல் 21.10.2012 திகதி காலை 10.30 மணிக்கு நீர்வேலியில் இந்திய விவசாய ஆலோசகர் திரு.முத்து ஐயா தலைமையில் நடைபெற்றது. பெருமளவு பயனாளிகள் இதில் கலந்து ஆர்வத்துடன் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு புத்தூர் பிரதேசத்தில் திரு. முத்து ஐயா தலைமையில் இதே கலந்துரையாடல் நடைபெற்றது. இதிலும் பெருமளவானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதில் வீட்டுத்தோட்ட செய்கை மூலிகை உற்பத்தி , உயிர் வேலி அமைத்தல் இதன் நன்மைகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.





# Homestead garden Project
# வீட்டுத்தோட்ட வருமானம் தரும் திட்டம்

இயற்கை முறை வீட்டுத்தோட்டம் பற்றிய பயிற்சியின் முதல் கட்டம் 22.10.2012 திங்கட்கிழமை தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் திரு.முத்து ஐயாவினால் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 6 கிராமங்களின் குழு தலைவர்கள் 54 பேர் உட்பட ஊழியர்களும் திட்ட ஆலோசகர் கமலநாதனும் கலந்துகொண்டனர். இப் பயிற்சியில் வீட்டுத்தோட்டத்தின் மூலம் மேலதிகமான வருமானத்தினை எவ்வாறு பெறலாம் எனவும் , இயற்கை முறையில் வீட்டுத்தோட்டம் செய்வதன் பயன்கள் பற்றியும் விசேடமாக உயிர்வேலி அமைத்தல் முறை, அதன் பயன்கள் , அதனூடான வருமானம் பெறல் என்பன விரிவாக பார்க்கப்பட்டது.

வீட்டுத்தோட்ட நடுகை முறை பற்றிய பயிற்சி 29.10.2012 திங்கட்கிழமை SOND அலுவலகத்தில் பணிப்பாளர் தலைமையில் AI லோகநாதன் அவர்களால் நடாத்தப்பட்டது.இதில் வீட்டுத்தோட்ட திட்ட ஊழியர்கள், IED திட்ட ஊழியர்களுடன் தெல்லிப்பளை பிரதேச வீட்டுத்தோட்ட பயனாளிகளின் குழு தலைவர்கள் 5 பேரும் கலந்துகொண்டனர். இதில் வீட்டுத்தோட்டம் ஒன்றினை அமைக்கும் முறை மற்றும் ஒவ்வொரு பயிர், மர இனங்களுக்கும் இடையிலான இடைவெளிகள் அத்தோடு கிடங்குவெட்டும் முறை, கூட்டுப் பசளை இடும் முறைகள வருமானம் பெறுவதும் பிரதானமாக கலந்துரையாடப்பட்டது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல்

**காலநிலைமாற்றமும் சூழல் பாதுகாப்பும் (Climate Change & Environmental protection )**

இத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மரங்களின் இலைகள் உதிர்ந்து விழுகின்ற தன்மை காணப்படுவதனால் விவசாய போதனாசிரியரின் ஆலோசனையினைப் பெற்றுக்கொண்டதுடன் அவரினால் குறிப்பிடப்படும் மருந்தினை மழை ஓய்ந்ததும் தெளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**விவசாய அமைப்புகளின் செயற்பாடு தொடர்பாக**

இம்மாதம் மண்டபத்தடி விவசாய அமைப்புகளுடன் வேலை செய்வது தொடர்பாக பெரும் பாக உத்தியோகத்தரிடம் 23.10.2012ம் திகதி கலந்துரையாடப்பட்ட போது விவசாய அமைப்புக்களை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் விவசாய அமைப்புக்களில் காணப்படும் பிரச்சனைகள், குறைபாடுகள் பற்றி விவசாய போதனாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

**மாதிரி பண்ணை அமைத்தல் தொடர்பாக**

மண்டபத்தடி கமநல கேந்திர நிலையத்தின் கீழ் இயங்கிவரும் 25 விவசாய அமைப்புகளில் வாதக்கல்மடு கமநல அமைப்பினை Model Farm செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்பினை பார்வையிடுவதற்காகத் திட்ட உத்தியோகத்தர் மற்றும் களமேற்பார்வையாளர் ஆகிய இருவரும் 26.10.2012ம் திகதி சென்று மாதிரிப்பண்ணை செய்யும் இடத்தினை பார்வையிட்டு Model Farm செயற்பாட்டினை மேற் கொள்ளும் முறைபற்றியும் தலைவரிற்கு தெளிவுபடுத்தப்பட்டது.

**அனர்த்த முன்னாயத்த திட்டமிடல் (Develop Disaster Resilient Community).**

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 17 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்களினை உருவாக்குதல் அல்லது புனரமைப்பு செய்வது அவர்களுடன் இணைந்து கிராமத்திற்கான இடர் வரைபடம் மற்றும் அனர்த்த முன்னாயத்த திட்டமிடலினையும் தயாரித்து வருகின்றோம் அந்தவகையில் எமது பொறுப்பிலுள்ள 10 கிம சேவையாளர் பிரிவுகளுக்குமுரிய இடர் வரைபடம் வரையப்பட்டு அவை பிரதேச செயலகத்திற்கு சரிபார்பதற்காக வழங்கப்பட்டு அவை அச்சிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.







## வீட்டுத்தோட்ட ஊக்குவிப்பு திட்டம்.

கிறிஸ்ரியன்எயிட் (**Christen Aid** ) நிறுவனத்தின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டடிப்பளை பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை கிராமத்தின் அம்பிளாந்துறை வடக்கு,அம்பிளாந்துறை மேற்கு மற்றும் அம்பிளாந்துறை மத்தி ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இயற்கை வீட்டுத்தோட்ட முறைமையினை மக்களிடையே அறிமுகப்படுத்துவதன் மூலம் உணவு பாதுகாப்பு நடவடிக்கையில் மக்களை ஈடுபடுத்தும் வகையில் 300 பயனாளிகளை கிராமத்திற்கு 100 பேர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்து வீட்டுத்தோட்டம் தொடர்பான திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

18.10.2012 எமது அலுவலகத்தில் இடம்பெற்ற திட்டமிடல் கலந்துரையாடல் கிறிஸ்ரியன் எயிட் இலங்கைக்கான முகாமையாளர் திரு.ராஜன் இருதயநாதன் மற்றும் எமது தலைவர் திட்டத்திற்கான ஆலோசகர் திரு முத்து ஆகியோரும் எமது பணியாளர்களும் கலந்துகொண்டனர்.

30 பேர்கொண்ட குழுத்தலைவர்களுக்கு மாதிரி வீட்டுத்தோட்டம் மற்றும் சிக்கனமான முறையில் பயனுள்ள உயிரோட்ட வேலியினை அமைத்தல் தொடர்பிலான பயிற்ச்சியுடன் கூடிய கலந்துரையாடல் 19.10.2012 அம்பிளாந்துறை மத்தி கிராம அபிவிருத்திச்சங்க கட்டிடத்தில் காலை 10 மணியளவில் ஆரம்பமானது. இப்பயிற்சிக்குரிய வளதாரியாக இந்தியா தமிழ்நாடு மதுரையைச் சேர்ந்த திரு.முத்து அவர்கள் கலந்துகொண்டிருந்தார்.




## காணிதொடர்பிலான ஆவணங்களை ஆவணப்படுத்தல் ஊடாக முரண்பாட்டினை குறைத்தல் (Conflict mitigation through land documentation)

மேற்படி தொனிபொருளிலான வேலைத்திட்டம் **USAID** அமைப்புடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகப்பிரிவில் உள்ள அனைத்து கிராம சேவகர்களுக்கும் காணி பதிவு, காணி உரிமை தொடர்பிலான செயலமர்வினை மாவட்ட காணிப் பதிவாளரின் வேண்டுகோளுக்கு இணங்க பயிற்சி நெறிகளை வழங்குவதுடன் கிராமக் காணித் தரவுகளை கணனி மயப்படுத்தலும் அதற்கான கொள்ளளவினை விருத்தி செய்தலும் ஆகிய செயற்பாடு எமது அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் 13 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் கணனிமயப்படுத்துவதற்கான நிகழ்ச்சியையும் தயாரிக்கும் வேலைகளை செய்துவருவதுடன் இத்தகவல்களை கணணியில் பதிவுசெய்யும் உத்தியோகஸ்தர்களை தெரிவுசெய்து எமது நிறுவனத்தில் கணணி பயிற்ச்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

தெரிவுசெய்யப்பட்ட பணியாளர்களுடனான கலந்துரையாடல் 29.10.2012 அன்று இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. இதில் திட்டம் பற்றிய விளக்கம் வழங்கப்பட்டது. அத்துடன் எமது நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஆவணங்களை கணணி மயப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## முன்பள்ளி செயற்பாடுகள்

எதிர் கால மாணவர்கள் கல்வியினை கருத்தில் கொண்டு 4 பிரதேச செயலாளர் பிரிவில் சிவாச்சரிட்டி அமைப்பின் நிதியுதவியுடன் எமது அமைப்பின் அமுலாக்கத்தில் முன்பள்ளிப் பாடசாலைகளை இயக்கி வருகின்றது.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இம்மாதம் 30.10.2012 திகதி நிகழ்ச்சி திட்ட உத்தியோகத்தர் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இம் மாத செயற்பாடாக **YMHA** பாடசாலைக்கு மாத்திரம் 05.102012 திகதி ஹனுமான் திரைப்படம் காண்பிக்கப்பட்டது





## கணனிப் பயன்பாடு

சொண்ட அமைப்பானது மக்களின் வாசிப்பு திறன் மற்றும் அனைவருக்கும் கணனி அறிவு ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இலவச நூலக சேவை மற்றும் இலவச கணனி சேவைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் பிரகாரம் இம்மாதம் 14 பேர் கணனி கற்க புதிதாக இணைந்து கொண்டுள்ளார்கள். மேலும் எமது கணனி வகுப்பின் மூலம் 36 சிறுவர் 12 இளையோர் பயனடைந்துள்ளார்கள்.

SOND **அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்**

### எதிர்காலத்தல் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .(Create a conducive Society for Good Environment for the Future).

**Diakonia** அமைப்பின் நிதி உதவியுடன் “எதிர்காலத்திற்கான சிறந்த சூழலை உருவாக்குவதற்கான ஒரு உகந்த சமூகத்தினை உருவாக்குதல்” எனும் திட்டத்தின் கீழ் சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் ஆகியவற்றிற்கான பிரசாரங்களை பாடசாலை மாணவர்களுக்கு வழங்குதலை நோக்காகக் கொண்டு 15/10/2012 அன்று காலை 10.00 மணிக்கு அக்கரைப்பற்று அல்- பதுார் பாடசாலையிலே அம்பாறை மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகளினுடைய ஒத்துழைப்புடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மரநடுகையின் முக்கியத்துவம் தொடர்பாக தெளிவூட்டும் நிகழ்வானது அக்கரைப்பற்று SOND அமைப்பின் த. விஜயகுமார் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. இதன்பொழுது அப் பாடசாலையினுடைய அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.





### பாலர் பாடசாலை

இம் மாதம் அம்பாரை மாவட்ட முன் பள்ளி ஆசிரிர்களுக்கான கொடுப்பனவு வழங்குவது தொடர்பான கலந்துரையாடலானது 2012.10.15 ஆம் திகதி அன்று மாலை 02.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான தி.ஜெனிதா அவர்களின் தலைமையில் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் 15 முன்பள்ளியைச் சேர்ந்த 28 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### பாலர் பாடசாலை மாணவர்களின் திறன் வெளிப்பாட்டு நிகழ்வு

2012.10.29 ஆம் திகதி அன்று காலை 09.30 மணிக்கு எமது அமைப்பில் சிறுவர் தினத்தினை முன்னிட்டு பாலர் பாடசாலை மாணவர்களின் ஆற்றலையும் ,திறன்களையும் வெளிக்காட்டும் வகையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடு அடங்கிய நிகழ்சி நடைபெறவுள்ளது. இவ்நிகழ்வில் 12 பாலர் பாடசாலை சேர்ந்த 24 ஆசிரியர்கள்,38 மாணவர்கள், SOND அமைப்பின் ஊழியர்கள்,10 பெற்றோர்கள் கலந்துகொண்டுள்ளார்கள். அன்றை தினம் நிகழ்வில் கலந்து சிறப்பித்த மாணவர்களுக்கு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டது.







# சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்திவருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 18 ஆண், 22 பெண் உள்ளடங்கலாக 40 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்

## நடைபெற்ற கலந்துரையாடல் விபரம்.

இம் மாதம் காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் 4 கலந்துரையாடலும், நடாத்தப்பட்டுள்ளது இக் கலந்துரையாடலின் போது 2 திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது.

## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

இம் மாதம் 07,14,21,28 ஆகிய திகதிகளன்று காந்தி கழக சிறுவர்களுக்கு நான்கு சிங்கள வகுப்பு கழக தலைவாரான சனத் தலைமையில் நடைபெற்றது. இவ் நான்கு வகுப்பிலும் 40 சிறுவர்கள் கலந்துகொண்டுள்ளார்கள்.

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

- காந்தி கழகத்தில் புதிதாக 18 சிறுவர்கள் இணைத்துள்ளார்கள்.
- காந்தி கழக சிறுவர்களுக்கு மூன்று ஆங்கில வகுப்பு பணியாளரான சுரேஸ்குமார் அவர்களினால் நடாத்தப்பட்டது.

## சிறுவர் தின நிகழ்வு

சிறுவர் தினத்தினை முன்னிட்டு எமது அமைப்பின் கீழ் செயற்படும் காந்தி கழக சிறுவர்களின் சிறுவர் தின நிகழ்வு அக்கரைப்பற்று SOND அமைப்பில் 2012.10.24 ம் திகதி நடைபெற்றது. இதன் போது 21 சிறுவர் நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது. இவ் நிகழ்வினை பலர் பார்வையிட்டனர்.







## கணனி பயன்பாடு

சமூகத்தில் உள்ள இளையோர், சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. மேலும் 15 சிறுவர்கள் புதிதாக கணணி வகுப்பில் இணைந்துள்ளார்கள்.





## தகவல் வளநிலையம்

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 9 தலைப்பில் 121 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

எமது தகவல் வள நிலையத்தின் காணப்படும் மாணவர்களுக்குப் பயன்படும் புத்தகங்கள் மற்றும் இறுவெட்டுக்கள் தொடர்பாக தெரியப்படுத்தும் நிகழ்வு அக்கரைப்பற்று அல் -பதூர் பாடசாலையில் 15/10/2012 அன்று நடாத்தப்பட்டது. இதன் போது பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு பயனடைந்தார்கள். இதனடிப்படையில் நூலகத்திற்கு புதிதாக 22 அங்கத்தவர்கள் இணைந்துள்ளார்கள்.

# சரஸ்வதி பூஜை

இந்து சமய நிகழ்வுகளின் ஒன்றான நவராத்திரி நிகழ்வானது 2012.10.24 ம் திகதியன்று எமது அக்கரைப்பற்று **SOND** அலுவலகத்தில் பணியாளர்களுடைய ஏற்பாட்டில் நடாத்தப்பட்டது இதில் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டுள்ளார்கள்





SOND

## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

.சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.